கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)
மலர்: 97 இதழ்: 18
வைகாசி 13 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## மேற்றிராணிமாரின் பேரவை மூன்று வருடத்துக் கொருமுறையா?

தற்போது 2 வருடத்துக்கொருமுறை கூடும் மேற்றிராணிமாரின் பேரவை இனிமேல் 3 வருடத்துக்கொருமுறை கூடினால் நல்லதென்று வத்திக்கான் அதிகாரிகள் அபிப்பிராயப்படுகின்றனர். இதையிட்டு உலக மேற்றிராணிமாரின் கருத்துகளை அறிய ஒரு சுற்றுக்கடிதம் ஆயர் சபைகளின் மூலமாக வத்திக்கானல் அனுப்பப்பட்டிருக்கிறது. பேரவைக்கு ஆயத்தப்படுத்த மேற்றிராணிமாருக்கு கூடியநேரம் அளிப்பதற்காகவும் அவர்கள் தத்தம் மேற்றிராசனங்களிலே உள்ள வேலைகளை முறிவில்லாமல் நடத்துவதற்கு உதவியாகவுமே இந்த ஆலோசனை ஆராயப்பட்டு வருகின்றது.

## ஆதாரமற்ற வதந்திகள்

இரு வருடங்களுக்கு முன் இந்திய ஆட்சி மன்றத்திலும் அதன் புறத்தும், அத்தேசத்தில் விசேஷமாய் கேரள தேசத்தில் கன்னியர்கள் அடாத முறையில் மடங்களில் சேர்க்கப்படுகிறார்களென்றும் அவர்கள் ஐரோப்பிய மடங்களுக்குக் கொண்டு சென்று அடிமைவேலைகளில் அமர்த்தப்படுகிறார்களென்றும் எழுப்பப்பட்ட முறைப்பாடுகளை விசாரணை செய்ய முறைப்படி நியமிக்கப்பட்ட ஆணையாளர் அவ்வதந்திகளில் எள்ளளவேனும் உண்மையில்லையென வெளிப்படுத்தியிருப்பதை இந்திய வெளிவிவகார மந்திரி சுவர்ணன் சிங் அவர்கள் அண்மையில் பகிரங்கப்படுத்தியிருக்கின்றார். உண்மையில்லாத வதந்திகளை வெளிப்படுத்துவதனால் நாட்டின் மதிப்பும் கௌரவமும் பங்கப்படுகின்றதென்பதை எவரும் மனதில் பதித்துக்கொள்ள அவர் விண்ணப்பித்திருக்கின்றார்.

## உலக கிறிஸ்தவசபை நிதிஉதவி

உலகப் பிரசித்தி பெற்ற "றீடேர்ஸ் டைஜெஸற்" என்னும் பிரசுரத்தில் உலககிறீஸ்தவசபை நிதி உதவி ஆபிரிக்க தேசங்களின் விடுதலைப்போராட்டத்துக்கு அளிக்கப்பட்டு வருகின்றதென வெளிப்படுத்தப்பட்ட செய்தியை அச்சங்க பொதுக்காரியதரிசியாகிய கார்சன் பிளேக் அடிகளார் ஆணித்தரமாக மறுத்திருக்கின்றார். "உலக கிறீஸ்தவ சபைகளின் சங்கம் தேசப் புரட்சியானதோ, வெள்ளையர்களுக்கு எதிரானதோ என்று எவரும் கருதினால் அது உண்மைக்கு எதிரானதாகும். அல்லற்படும் மக்களின் உதவிக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியின் ஒரு பாகம் ஆபிரிக்காக்கண்டத்து வறியமக்களின் உபயோகத்துக்கென அனுப்பப்பட்டது உண்மையே. ஆனால் அப்பணம், புரட்சிகரமான கருமங்கள் எவற்றுக்கும் பிரயோசனப்படுத்தப்படவில்லை. பசிப்பிணியையும், வறுமையையும், வியாதியையும், அறியாமையையும்ஓரளவு அகற்றவே இந்தப்பணம் உபயோகிக்கப்பட்டது" என அவர் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

### பரி. தந்தையின் மைத்துனர் காலமானர்

சின்னப்ப பாப்பரசரின் மைத்துனரான காலோ மொந்தினிச் சுவாமியார் இத்தாலியிலுள்ள பொலோஞ நகர புகையிரத ஸ்தானத்தில் சடுதியாக மரணமாயினர். இவர் பாப்பரசரின் சொந்த ஊரான பிறெசியா நகரின் பதில் விக்கார் ஜெனறல். மரிக்கும்போது இவரின் வயது 68.

### அமலமரித் தியாகிகளின் தலைவர் ஓய்வு பெறுகிருர்

கடந்த 25 வருடங்களாக அமலமரித் தியாகிகளின் (O. M. I) தலைவராகக் கடமையாற்றிவந்த வண. லீயோ டெஷாட்டலே சுவாமியார் அண்மையில் ஓய்வுபெற்றுக் கொண்டார். தனது கடைசி அறிக்கையில் டெஷாட்டலே அடிகளார் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"நன்மையேவரும் என்னும் எதிர்நோக்கத்துடன் எனது வேலையைச் செய்துவந்திருக்

[3-ம் தலம் பார்க்கவும்.]

## விமான விபத்தில் சிரேஷ்ட கன்னியாஸ்திரி உயிர் இழந்தார்

சில தினங்களுக்கு முன் அடிஸ் அபாபா என்னும் இடத்தில் நடந்த விமான விபத்தொன்றில் உயிரிழந்த 41 பேரில் ஆபிரிக்க பிரான்சிஸ்கன் கன்னிகாஸ்திரிகளின் சிரேஷ்டரான மேரி பெனடிக்ற் ககில் தாயாரும் ஒருவர். விமானம் நயிரோபியிலிருந்து லண்டனுக்கு பறந்துகொண்டிருக்கும் வேளையில் விபத்து நடந்தது. அநேகமாக பள்ளிக்கூடப் பிள்ளைகள் உட்பட 101பேர் பயணம் செய்துகொண்டிருந்தனர். பெனடிக்ற் தாயார் ஆபிரிக்காவிலுள்ள தமது சபைக்குச் சேர்ந்த மடங்களைப் பார்வையிட்டபின் இங்கிலாந்து திரும்பிக் கொண்டிருந்தார். இவர் இச்சபையின் 3-வது தலைவி. 55 வயது நிரம்பியவர்.

**கத். வானொலி நிகழ்ச்சி**
**சிறுவர்பகுதி—வைகாசி**
**தமிழ்ச்சேவை (1)**

**நாள் :**
வைகாசி — 17

**நேரம் :**
மாலை 6-15 மணி

**நடாத்துபவர் :**
சங். சகோதரர் சாமிநாதர்

**விடயம் :**
"கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் நாமே"

**பங்குபற்றுபவர்கள் :**
அநுரதபுரியைச்சேர்ந்த கத். மாணவர்கள்.

கிறேன். எமது சபையின் ஸ்தாபகரான டீ மசெனட் ஆண்டகையின் எண்ணங்களையும் கொள்கைகளையுமே நானும் பின்பற்ற முயற்சித்திருக்கிறேன்." புதிய தலைவர் இவ்வாரம் ரோமாபுரியிலே தெரிவு செய்யப்படுவார்.

## அலையிலே வரும் ஆண்டவன் செய்தி

இன்று மக்கள் எல்லாம் ஒரு புதிய மொழியைப்பேசுகிறார்கள். சொல்வாயிலாகவும், எழுத்து வாயிலாகவும் அன்று நேரடியாக மனிதன் கருத்துக்களைப் பரிமாறினன். இன்று மனிதனின் நவீன கண்டுபிடிப்புகள் மனித உறவுகளையே மாற்றிக்கொண்டு வருகின்றன. புதிய மிகவும் சிறந்த சமூகத்தொடர்புக் கருவிகளான அச்சு வெளியீடு, திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி போன்ற சாதனங்கள், எவ்வித கருத்துக்களையும் படிப்பினைகளையும் மிக எளிதாக மக்களிடையே பரப்பக்கூடிய புதிய வழிகளைக் காட்டி ஒரு "புதிய மொழியை" மக்களுக்குத் தருகின்றன. இக்கருத்துப் பரிமாறலின் வேகத்தில் சமூகங்களும், அதன் மதிப்பீடுகளும், பண்பாடுகளும் பாதிக்கப்படாமல் இருக்கமுடியாது.

காலை தொடங்கி மாலைவரை ஒளி—ஒலி சாதனங்களைக் கொண்டு தம் கருத்துக்களைப் பரப்பி மனித உணர்வுகளைத் தாக்கி அவனைத் தன் பக்கம் கவர உழைக்கும் வியாபார உலகிலே மனிதருக்கு பழைய முறைகளிலே நாம் நற்செய்தியை வழங்கினால் அது அவர்களுக்குப் புரியாது. புரிந்தாலும் அதில் அவர்களுக்கு ஆர்வம் இருக்காது. நாம் கொடுக்கும் செய்தி அவர்களுடைய மனதை ஈர்க்கும் ஆற்றலை இழந்துவிடும். திருச்சபையானது இப்புதிய மொழியைப் பேசவேண்டும். இப்புதிய சமூகத்தொடர்புக் கருவிகளின் உதவியையும் பயன்படுத்தி மீட்பின் செய்தியை அனைவருக்கும் அறிவிக்கவேண்டும். நம் நட்டிலே தொலைநாட்சி சேவை இன்னும் வரவில்லை. ஆனால் எவரும் கேட்டு இன்புறும் வானொலி நமக்கு அரியவாய்ப்பைத் தருகிறது.

எமது நாட்டில் வானொலி சேவையானது நேரடி அரசாங்க கண்காணிப்புக்குக்கீழ் இருந்தாலும், அவர்கள் எல்லாச்சமயத்தவர்களுக்கும் ஒலிபரப்பு நேரம் கொடுக்கிறார்கள், தமிழ்க் கத்தோலிக்கருக்கும் தனியே ஒலிபரப்பு நேரம் வாரம் வாரம் ஒதுக்கப்படுகிறது. இதன் மூலம் யேசுவின் நற்செய்தியைப் பரப்ப எமக்கு எத்துணை அரியவாய்ப்பு அதை நாம் தக்கமுறையில் பயன்படுத்துகிறோமா? ஆனால் பிற சமயத்தவர்கள் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இவ்வரிய வாய்ப்பைத்திறம்படப்பயன்படுத்தி வருகிறார்கள். நம் பங்குகளிலும் நிறுவனங்களிலும் இருக்கும் குருக்கள், கன்னியர்கள், ஆசிரிய பெருமக்கள், கலைமன்றத்தினர், இளைஞர் உலகம் என எல்லோரும் அப்போஸ்தல ஆர்வத்தோடு எழுந்து விட்டால் எமது வானொலி நிலையமே திணறிப்போகச் செய்ய முடியாதா?

**நாம் செய்ய வேண்டியவை:**

1. "நேயர் வட்டம்": வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சிகளையும் பிற நிகழ்ச்சிகளையும் தவறாமல் கேட்கும் நேயர்களைக் கொண்ட சிறு கூட்டங்களை பங்குத்தளத்தில் அமைக்கலாம். இவர்கள் கத்தோலிக்கநிகழ்ச்சிகளைக் கேட்பதற்கும்—தருணம் கிடைக்கும்போது தாங்கள் கேட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி கலந்துரையாடுவதற்கும் ஒன்று வரவேண்டும். கிறிஸ்தவ நிகழ்ச்சிகளையும் அவற்றைத் தயாரிக்கும் கலைஞர்களைபற்றிய தமதுபாராட்டுகளையும் அபிப்பிராயங்களையும் வானொலி நிலையத்தாருக்கு ஒரு அஞ்சல் மட்டை மூலம தெரியப்படுத்த வேண்டும். இதனால் நமக்கு ஒரு பத்துச் சதம்தான் செலவாகும். வானொலியில் நம்மவர்க்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உங்கள் விமர்சன வெள்ளம் நிலையத்தை நோக்கிப் பாயட்டும். உங்கள் பத்துசதத் தபால் அட்டை பல்லாயிரமடங்கு பயன் கொடுக்கும். உங்கள் இச்சிறு சேவையால் எமது வானொலி கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பும் நல்லதொரு சமூகத் தொடர்பு சாதனமாக மாறும்.

2. "கிறிஸ்தவ மெல்லிசைப் பாடல்கள்"— "நேயர் விருப்பம்" நீங்கள் கேட்டவை, விடுமுறை விருப்பம், மகளிர் கேட்டவை போன்ற நிகழ்ச்சிகளில் கிறிஸ்தவ மெல்லிசைப் பாடலகளை ஒலிபரப்புமாறு எமது மன்றங்கள் விண்ணப்பம் செய்ய வேண்டும். இதற்குத் தேவையான கூப்பன்களை வானொலி மஞ்சரியில் இருந்து எடுக்கலாம்.

3. நன்கு எழுத்து வன்மை உடையவர்கள் வானொலியில் நடத்தக்கூடிய சிறு நாடகங்கள், உரை-இசை சித்திரங்கள், பட்டி மன்றங்கள், உரை, திருமறை விளக்கம் போன்றவைகளை எழுதி எமக்கு அனுப்பி உதவலாம்.

4. வானொலியில் எமது கத்தோலிக்க நிகழ்ச்சிகளைப் பற்றிய தகவல்களைக் காவலன் வாயிலாகவும் பிற வழியாகவும் நேயர்களுக்கு முன்கூட்டியே அறிவித்தல் கொடுக்கலாம்.

5. நேயர்கள் கத்தோலிக்க நிகழ்ச்சிகளைக் கேட்கும் போது, அதை தயாரிப்பாளருக்காகவும், அதை கேட்போர்க்காகவும் ஒரு சிறிய வேண்டுதலை ஒப்புக்கொடுப்பது எவ்வளவோ பயன்மிக்க செயலாகும்.

**கத்தோலிக்க நிகழ்ச்சிகளின் மறைமாவட்ட பொறுப்பாளர்,**
**புனித ஆனைள் ஆலயம்,**
**வங்காலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# சத்தியவேத பாதுகாவலன்

## எங்கள் சந்தோஷத்தின் காரணம்

ஒரு சிறுமி தன் தந்தையிடம் "குருமாரும் கன்னியர்களும் எவ்வளவோ சந்தோஷமாய் இருக்கிறார்களே, அது எப்படி?" என்று கேட்டாள். உலகத்தில் கிடைக்கக்கூடிய இன்பங்களையெல்லாம் தேடிப்பெற்றுத் துய்க்கும் மக்களை விட, அவற்றையெல்லாம் துறந்துவாழும் குருமாரும், கன்னியரும் எவ்விதம் சந்தோஷமாக இருக்க முடியுமென்பது அவளுக்குப் புதிராகஇருந்தது அவளதுகேள்விக்குத் தந்தையால் விடைகூற முடியவில்லை. ஆயினும், அக்கேள்விக்கு விடைகண்டு பிடிப்பதில் முனைந்தார், விடையும் கண்டார்.

உண்மையான சமயவாழ்வு மக்களைப் புனிதப்படுத்துவது மட்டுமல்ல, அவர்களைச சந்தோஷப்படுத்துவதுங்கூட என்பதே அந்தவிடை ஆகையினுற்றான் ஆழ்ந்த சமயவாழ்வு வாழ்வோர் எத்துன்ப மத்தியிலும் சந்தோஷத்துடனிருக்கக் காண்கிறோம். சமயப்பற்றுள்ள ஒருவர் இறைவனிடத்தில் உறுதியான நம்பிக்கை வைத்திருப்பதால் இறைவன் தம்மை நேசிக்கிறார், பராமரித்து வருகிறார். ஆகையால் நடப்பதெல்லாம் நன்மைக்கேயென்று கருதுவர். இறைவனிடத்தில் பிள்ளைக்குரிய இந்த நம்பிக்கை வைத்திருந்தால் கவலைக்குக் காரணம் ஏது?

சிறுவர் எப்போதும் சந்தோஷமாய் இருப்பதன் காரணம் அவர்கள் தங்கள் கவலைகளையெல்லாம் தம் பெற்றோரிடத்தில் விட்டுவிடுவதுதான். பெற்றோரும் அவ்வண்ணமே தமது கவலைகளை இறைவனிடத்தில் விட்டுவிட்டால் தமது கவலைகளை விட்டொழித்து அவர்களும் சந்தோஷமாக இருக்கலாம், கவலையை விட்டுவிடுவதென்றால் உழைப்பை விட்டுவிடுவதல்ல. இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட கடமைகளை எம்மாலானமட்டும் பூரணமாக நிறைவேற்ற வேண்டும் என்பது உண்மை. ஆனால் அதைச் செய்தபின் அதன் விளைவுகளை இறைவன் கையிலேயே விட்டுவிடவேண்டும்

இறைவனது சித்தத்தை நிறைவேற்றும் நோக்குடனே தமது கடமைகளைச் செய்வோரிடம் சந்தோஷம் நிலவுகின்றது. பரிசுத்த் தனத்தில் மேம்பட்டு இருப்பவரது முகமே மலர்ச்சியுடன் இருப்பதைக் காணலாம். ஆகவே கிறிஸ்தவ வாழ்வைப் பெரிதும் அனுசரிக்கும் ஒருவர் சதா சோர்ந்த முகத்துடன் காணப்பட்டால் அவர் தமது சமய வாழ்வைச் சரியானவழியில் பயன்படுத்தவில்லை, எதிலோ தவறிவிட்டார் என்று உணரலாம். சமயவாழ்வில் துடிப்பும் மகிழ்ச்சியும் உண்டு. எனவே கவலைக்கு இடமில்லை.

பரலோகத்துக்குச் செல்லும்வழி ஒடுங்கியது, கஷ்டமானது, கல்லும் முள்ளும் நிறைந்தது என்ற பயமுறுத்தலைக் கேட்டிருக்கிறோம். ஆனால், அக்கல்லையும் முள்ளையும் பொருட்படுத்தத் தோன்றாதபடி அங்கு இனிய தென்றல் வீசுவதையும், இனிய நீர்ச்சுனைகள் பெருகுவதையும் அவ்வழியிற் சென்றவரே அறிவார்.

ஆகவே எமது உள்ளம் சோர்வடைந்தால் தூயஆவியானவருக்கு ஒரு விசேஷ செபம் செய்வோமாக. ஏனெனில் அவரது கனிகளுள் ஒன்று மகிழ்ச்சி.

## சுவாமி ஜயக்கொடி அவர்கள் தேசவாத்திய சங்கீத அமைப்பு குழுவினரானர்

பிரதான கொண்டாட்டங்களில் நமதுநாட்டுக் கலாச்சாரத்தைச் சிறப்பாகப் பிரதிபைப்படுத்தும் நோக்கத்துடன் விற்பன்னர் ஒருசிலர் அடங்கிய சங்கீத அமைப்புக் குழுவொன்றை நமது அரசாங்கம்நியமித்திருக்கின்றது. அக்குழுவில் நம்நாட்டுக் கலாச்சாரத்தில் நன்கு நிறைந்திருக்கும் வண.மார்சலின் ஜயக்கொடி சுவாமியாரும் இடம் பெற்றிருக்கின்றார். சுவாமியவர்கள் சிங்கள ஓவிய, சிற்ப சங்கீத வல்லுனர் மாத்திரமல்லர்; இத்துறைகளில் தமிழரது கலாச்சாரத்திலும் பங்கு கொண்டவர். சிலவாரங்களுக்குமுன் இவர் யாழ்ப்பாணத்திலே பலகாலம் வசித்து வந்த நாட்களில் இத்துறைகளில தோய்ந்துகொண்டார்.

# ஆண்டவரது மோட்ச ஆரோகணம்

அனைவருக்கும் இரட்சணியம் அருளவந்த யேசு ஒலிவமலையில் தமது அரிய அப்போஸ்தலர்களைவிட்டுமோட்சத்துக்கு ஆரோகணமாகுமுன், தமது அருட்கரத்தால் அவர்களை ஆசீர்வதித்தார். யோர்தான் நதிக்கரையில் "இவரே நமது நேச குமாரன்..." என்று வானகத் தந்தையால் மகிமை பெற்றவர், ஓர் உயர்ந்தமலைமீது யேசுவின் திருமுகம் கதிரவனைப்போற் பிரகாசிக்க, அவரணிந்திருந்த ஆடைகள் பனிபைப்போல் வெண்மையாய்விளங்க, 'நமது நேச குமாரன் இவரே; இவர் பேரிற் பூரண பிரியமாய் இருக்கிறோம்......" என்று பரமபிதாவினால் மகிமையுற்றவர், இப்பொழுது மோட்ச இராச்சியத்தில் தமது தந்தையின் வலது பக்கத்தில் மகிமையுடன் வீற்றிருக்கத் தமது பிரிய நண்பர்கள் முன்பாக மோட்சத்துக்கு எழுந்தருளுகிறார்.

பூவுலகில முப்பத்துமூன்று வருடம் தமது பிதாவுக்கு அளித்த மகிமையையும, மானிடர்க்கு அருளிய விலைமதித்தற்கரிய திரவியங்களையும் யேசு இப்பொழுது நினைக்கின்றார். "எல்லாம் முடிந்தது" என்று கல்வாரி மலையிற் கூறியது போன்று ஒலிவமலையிலும் நினைக்கின்றார்.

உலகினை விட்டுப் பிரியும் நேரம் அணமிவர, தமது அருகில் நிற்கும் ஆருயிர் அன்னையையும், அவரைச்சூழ நிற்கும் அருமை அன்பர்களையும் பார்த்து, அவர்களுடைய இதயங்களிற் பதியும் வண்ணம் இனிய வாக்கியங்களை நவில்கின்றார். தமது அரிய நண்பர்கள் முடிவு பரியந்தம் விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம், என்னும் மூன்று புண்ணியங்களிலும், உறுதியாய் நிலைகொள்வதற்கு அவர்களுக்கு அவசியமான அன்புததும்பும் அரிய வாக்கியங்களை உரைக்கின்றார். "நீங்கள் அனைத்துலகிற்கும் சென்று சகலசாதி சனங்களுக்கும் நற்செய்தியைப் போதியுங்கள்; விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சணியம் அடைவான்; விசுவசியாதவன ஆக்கினைத் தீர்வையிடப்படுவான்;" மேலும் விசுவசிக்கிறவர்களைத் தொடர்ந்து அற்புதங்கள் நிகழும்; என் நாமத்தினாற் பேய்களைத் துரத்துவார்கள்; நூதனமான பாஷைகளைப் பேசுவார்கள்; பாம்புகளைப் பிடித்துத் தூக்குவார்கள்; சாவுக்கு ஏதுவான யாதொன்றைப் பானம் செய்தாலும், அது அவர்களுக்குப் பொல்லாங்கு செய்யாது; நோயாளிகள் மேற் கைகளை நீட்ட அவர்கள் சௌக்கியம் அடைவார்கள்;" என்று தமது பிரிய நண்பர்களுக்கு அறிவுரை புகன்று தமது அருள் நிறைந்த திருக்கரத்தால் அவர்களை ஆசீர்வதித்தார். அந்நேரமே அவர்களிடத்திலிருந்து பிரிந்து உயர எழுந்தருளினார்.

அப்பொழுது ஒரு மேகம் வந்து அவர்களுடைய கண்களுக்கு அவரை மறைத்தது. யேசு பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகிறதை அவர்கள் கூர்ந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ! வெண்ணுடை அணிந்தவர்களாகிய இருவர், அவர்கள் அருகில் வந்து நின்று "கலிலேய மனிதரே! நீங்கள் ஏன் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்; உங்கள் இடத்தில் நின்று பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த யேசுநாதர், எப்படிப் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகக் கண்டீர்களோ, அப்படியே திரும்பவும் வருவார்" என்றனர். யேசுவின் பிரிய நண்பர்களோ அவரை ஆராதித்து மிகுந்த சந்தோஷத்துடனே யெருசலேம் நகருக்குத் திரும்பிப் போனார்கள்.

நமது மீட்பராகிய யேசு இவ்வுலகிற் தமது திருச்சபையை உறுதியாக நிலைநாட்டுதற்கும், தமது ஞான இராச்சியத்தை ஸ்தாபிப்பதற்கும் வேண்டிய யாவற்றையும் செய்து, உலக முடிவுபரியந்தம் திருச்சபையை நடப்பித்து வருதற்குரிய ஞான அதிகாரிகளையும் நியமித்தார். இப்பொழுது வானகத்தில் நமக்கோர உன்னத ஸ்தானத்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

**நம் மேற்றிராணியாரின் கடிதம்:**

# யாழ். மறை மாவட்ட மறைக்கல்வித் தினம்

**கிறீஸ்துவில் எனது அன்பார்ந்த குருப்பிரசாதிகளே, அன்பார்ந்த பிள்ளைகளே!**

நம்நாட்டு மறைஆயர் குழுவின் தீர்மானத்தின்படி, இவ்வருடம் மறைக்கல்வித் தினம் திரித்துவ ஞாயிறன்று வைகாசித்திங்கள் 28-ம்நாள் கொண்டாடப்பட விருக்கின்றது. இவ்விழாவிற்கென நாம் தெரிந்துகொண்ட அடிப்படைக் கொள்கை "குடும்பம் கிறீஸ்தவ உருவாக்கலின் தொட்டில்." ஆகையால் பெற்றாரின் மறைக்கல்வி இயக்கமே பிரதான கவனத்திற்குக் கொண்டுவரப்படல் வேண்டும்.

மறைக்கல்வித்தின விழாவிற்கு மக்களைத் தயார் செய்துகொண்டிருக்கும் இச்சமயத்தில், அன்பார்ந்த குருப்பிரசாதிகளுக்கு யான் கூறவிரும்புவது யாதெனில், உங்கள் பங்கு மக்களுக்கு விழா தினத்தைப் பற்றியும், விழாவின் அடிப்படைக் கொள்கைபற்றியும் 28-ந் தேதிக்கு முன்வரும் சில ஞாயிறுதினங்களில் உரைநிகழ்த்துவது பயனளிக்கும். யாழ். மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் இந்த விழாவிற்கு உங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குவார்.

அன்றைய தினமாகிய வைகாசித்திங்கள் 28-ந் தேதி ஞாயிறன்று சகல பங்குகளிலும் சேர்க்கப்படும் காணிக்கைப்பணம் மேற்றிராசன மறைக்கல்வியின் அப்போஸ்தலிக்க பணிக்காக ஒதுக்கப்படலாம். இத்தொகையை மேற்றிராசன பொக்ஷாதிபருக்கு அனுப்பிவையுங்கள். பாடசாலைகளிலும் இதேகருத்துக்காக விழா தினத்தைபொட்டி முன்னைய கிழமையில் காணிக்கை சேர்க்கலாம். சில மேற்றிராசன பங்குகளில் அன்றைய தினத்தில், "கிறீஸ்தவ திருமறைக் கல்விச்சபை"யையோ, "விசாரணைப் பங்கு மறைக்கல்விப் பள்ளி"யையோ பெற்றார் மறைக்கல்வி இயக்கத்திற்கு நிலையான ஸ்தாபனங்களாக ஆரம்பித்து வைப்பது விரும்பத்தக்கது. சில பங்குகளிலேயோ, ஸ்தாபனங்களிலேயோ அடிப்படைக் கொள்கையை எடுத்தாண்டு, விசேட வழிபாடுகள், சிறிய நாடகங்கள் போன்ற நிகழ்ச்சிகளும், கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி போன்றனவும் தயாரித்து நிகழ்த்தலாம். அத்துடன் ஒரு விசேட கூட்டத்தில் ஒரு சிறப்புப் பேச்சாளரால் அடிப்படைக் கொள்கை பற்றிய பேச்சும் நிகழ்த்தப்படலாம். இறுதியாக இம் மறைக்கல்விவிழா வைகாசி 28-ந்தேதி மட்டுமன்றி, ஒருவாரத்திற்கு முன்னரோ அன்றேல் பின்னரோ கொண்டாடப்படலாம்.

கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறீஸ்துவிலும் மரியன்னையிலும் உங்கள் அன்புள்ள,

+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, ஒ. எம். ஐ.,
யாழ். மறைஆயர்.

8-5-72, யாழ்நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் கிறிஸ்துவ உருவாக்கலின் தொட்டில்

அன்புக்கென மனிதன் படைக்கப்பட்டான். இறைவனுடன் மனிதன் கொள்ளும் உறவு தலைபான அன்பு. அந்த அன்பின் ஒன்றிப்பானது குடும்பத்திலே ஆரம்பித்து அக்குடும்ப உறுப்பினர் அத்தனை பேரையும் உயர்நிலைக்கு இட்டுச் செல்கிறது. மனிதனின் முன்னேற்றமும் சமூகத்தின் உயர்வும் ஒன்றின் மேல் ஒன்று வேறுப்பிரிபறச் சார்ந்திருக்கின்றது வெளிப்படை. மேலும், தனி மனிதனுடையவும், மனித சமுதாயத்தினுடையவும் சீரமைப்பு குடும்பச் சமூகத்தின் நன்னிலையோடு நெருங்கித் தொடர்ந்து நிற்பதை நாம் நன்கு அறிவோம். குடும்பமே சமுதாயத்தின் அடித்தளம். தனித்தனிக் குடும்பங்களின் தன்மை, உயர்வு, தாழ்வு இக்குடும்பங்களை உறுப்பாகக் கொண்ட சமூகத்தை உயர்த்தவோ தாழ்த்தவோ வல்லன, குடும்ப நிறுவனம் பிளவுபடுமாயின் சமுதாயமே புரையோடி பலங்குன்றி வீழ்நிலை எய்தும். அழியாத முழுநிறைவு தரக்கூடிய உருவாக்கலைக் குறிக்கோளாகக் கொண்டு குடும்பத் தாய் தந்தையர் தம் மக்களைப் பழக்கும்போது தான் குடும்பம் சீர்நிலைபெற்றுத் திகழமுடியும்.

குடும்பம், குழந்தைக்கு இறைவனிடமிருந்த நேரடியாகக் கொடுக்கப்படும் இயற்கைச் சூழல். துர்ப்பாக்கியமாய் தாய் தந்தையரை இழந்து இவ்வியற்கைச் சூழலிலிருந்து அகற்றப்பட்ட அனாதையரைத் தவிர, பிற எல்லாக் குழந்தைகளும் இச்சூழலிலேயே முழு மனித நிலைக்குரிய அடிப்படைப் பயிற்சிபெற வேண்டும். தம்பிள்ளைகளுக்கு உயிர் அளித்த பெற்றோரே அப்பிள்ளைகளுக்கு இறை உணர்ச்சி, மறைஅறிவு, பிறரன்பு ஆதிபவற்றைக் கிறிஸ்துவகண்ணோட்டத்தில் மதிப்பிடப் பக்கக் கடமையுடையவர். அவர்களே தம் சிறார்களின் முதல் ஆசிரியர். குடும்பத்தில் தான் குழந்தை முந்த முந்த நல்ல மனிதப் பண்புகளையும் கிறிஸ்தவ நிறைவையும் பெற்று விளங்க முடியும். ஏனெனில், இறையன்பு பிறரன்பு பெற்றோர் அன்பில் ஊற்றெடுத்து வலுவடையும். கிறிஸ்துவ உருவாக்கப் பணியில் சிறப்பிடம்பெற்று விளங்கும் குடும்பமே பிள்ளைகளுக்கு இறைவன் அளித்த முதல் பள்ளி. இல்லமே இறைவன்

**திருமதி மாகிறெட் சவரிமுத்து**

தாமே உருவாக்கிய கல்விநிறுவனம் 13-ம் சிங்கராயர் கூறுவதுபோல், "வீட்டில் பெறும் பயிற்சி பழக்கவழக்கங்களிலேயே பிள்ளைகளின் உருவாகும் தன்மை தங்கிஉள்ளது." குழந்தை வளர்ந்து வரவர இந்தத்தன்மைபக்குவமடையப் பெற்றோர் அடிகோலி வைத்தால் புறநிறுவனங்களாகிய மறை ஆசிரியர், பாடசாலையில் ஆற்றிவரும் கல்விப்பணி பயன்தரும் வழியில் செல்லும். பெற்றோரது மறுக்கமுடியாத இக்கடன் நிறைவேற்றப்படாதவிடத்து வேறெந்தச் சக்தியும் அதை நிறைவேற்ற முடியாது. காலத்தில் ஆற்றப்படாத அலுவல் குறைவுற்று அமிழ்ந்து போகும். விதைகாலம் பண்புடன் அமையும் போதுதானன்றோ அறுவடை பெருகிப் பொலியும்.

ஒவ்வொருவரும் இறைத் தந்தையின் புனித தத்துவத்திற்கு தமக்குரிய அளவிலும் முறையிலும் அழைக்கப்படுகிறார்கள். ஆகவே, இனப் பெருக்க அலுவலில் சக உழைப்பாளராயிருக்கும் பெற்றோர் இதில் வெகு காத்திரமான அக்கறையுடையவராய் இருத்தல் வேண்டும். திருமண அன்பு தன்னியல்பிலே பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கணவனும் மனைவியும் ஓர் புனித குடும்பமாய் இணைந்து படைப்பு அலுவலில் மட்டுமன்று மீட்பு அலுவலிலும் தீவிர பங்கு பெறுகின்றனர். பரம அன்புடன் ஒன்றாகி, தந்தை தாய்க்குரிய அவர்களது உண்மைப் பணியில் உதவியும் ஊக்கமும் பெறுவதற்கென இறைமகன் யேசு திருமண நிறுவனத்தை ஓர் அருட்சாதனத்தின் வழியாய் வளப்படுத்துகிறார். குடும்பத்தினர் தம் இக்கட்டான நிலையைப் பெருமனத்துடனும் பரந்த அறிவுடனும் சமாளிப்பதற்கான அருளைப் பொழிந்து அவர்களுக்கு உறுதுணையாகத் தாய்த்திருச்சபை பல வாய்ப்புகளை உவந்தளிக்க முன்வருகிறது. இவ்வருட்சாதனத்தால் தங்கள் வாழ்க்கை நிலையிலும் பதவியிலும் இறைமக்களுள் தமக்குரிய தனிக்கொடையைப் பெற்றுக் கொள்கின்றனர் பெற்றோர். ஆகவே அவர்கள் தம் பிள்ளைகளுக்கு முதன் முதல் விசுவாசத்தைப் போதிப்பவர்களாக அமைதல் அவசியம். இவ்விஷயத்தில் தனிப்பட்ட அக்கறை காட்ட வேண்டிய முதற் கடன் பூண்டுள்ளனர்.

பெரும் இறைவாக்கினரான கிறிஸ்து தந்தையின் அரசைப் போதித்தார். வாழ்வின் சான்றோடு கூடிய அவர் போதனையின் ஆற்றலையும் செல்வாக்கையும் நற்செய்தி ஏடுகள் பறைசாற்றுகின்றன. இறைவாக்கு உரைக்கும் இவ் அலுவலை அவர் திருச்சபை அதிகாரிகள் வழியாய் மட்டுமல்ல பொது நிலையினர், குறிப்பாய் பெற்றோர், வழியாகவும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். "சமூக குடும்ப வாழ்விலே நற்செய்தியின் வல்லமை திகழும்படி அவர்களைத் தம்சாட்சிகளாக நியமித்து விசுவாச உணர்வையும் போதனையின் அருளையும் அளித்துள்ளார்."

"இறைவாக்குரைக்கும் அலுவலைப் பொறுத்தமட்டில் தனி திருவருட் சாதனத்தால் புனிதமாக்கப்பட்ட திருமணக் குடும்ப வாழ்வு மிகமுக்கியமானது. எங்கு முழுவாழ்விலும் கிறிஸ்துவ மறை நிறைந்து விளங்கி நாளுக்கு நாள் அதிகமாக அவ்வாழ்க்கை உருமாற்றுகிறதோ அங்கு தான் பொது நிலையினரின் அப்போஸ்தல பணியைசெய்யமுடியும். அதுவே அப்போஸ்தலத்துவத்தின் சிறந்த பள்ளியாக அமைகின்றது. அங்கு தான் கணவன் மனைவியர் ஒருவர் ஒருவர் முன்னிலையிலும் தம் மக்கள் முன்னிலையிலும் கிறிஸ்துவின் அன்பிற்கும் அவர்மேல் உள்ள விசுவாசத்திற்கும் சாட்சிகளாய் நின்று தமக்கே உரிய அழைத்தலுக்கேற்ப வாழ்கின்றனர். கிறிஸ்தவ குடும்பம் இறைஅரசின் இன்றைய பண்புகளையும் வரவிருக்கும் இன்ப வாழ்வின் மேலுள்ள நம்பிக்கையையும் ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றது" என சங்க ஏடுகள் (திருச்சபை : 35) வலியுறுத்துவதை நாம் அறிவோம்.

—தொடரும்

## மறைக்கல்வித்தின போட்டி பற்றிய குறிப்புகள்:

**1. பேச்சுப் போட்டி:**

வயது எல்லை: 15-க்கு மேல்

**நேரம்:** 5 நிமிடங்கள்.

**பங்கு பற்றுவோர்:** யாழ்நகர் பள்ளிக்கூடங்களின் இறுதிப் போட்டி மட்டும் யாழ்நகர் பெரிய கோவில் திறந்த வெளியரங்கில் நடைபெறும். மற்றைய பள்ளிக்கூடங்கள், தத்தம் பங்குக் கோவில்களின் மறைக்கல்வி விழாவில் பங்கு கொள்ளவும். பங்குத் தந்தையருடன் தொடர்பு கொள்ளவும்.

**2. சுவரொட்டிப் போட்டி:**

சுவரொட்டி அளவு: 2'-2'

## மறைக்கல்வி குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 றை | | | 3 | வி | 4 | 5 ர் | ■ |
| ■ | | ■ | ■ | | ■ | ம் | | ■ |
| ■ | | ■ | 6 | க் | ■ | | ளே | 7 |
| 8 | | ■ | | ரு | ■ | | | |
| ரு | ■ | 9 | சு | | | ம் | ■ | |
| | ■ | ■ | | 10 | ரை | | | ல் |
| | ■ | ■ | | ■ | 11 | | ள் | ■ |
| க் | ■ | 12 | | | ப் | | ■ | ■ |
| | ■ | ■ | 13 ம் | | | | ரி | |

### குறிப்புகள்

**மேல்-கீழ்**

2. பிள்ளைகளின் கிறீஸ்தவ வாழ்வில் பெற்றோருக்கு இருக்கவேண்டிய இது தலைகீழாய்க் கிடக்கிறது.

3. கிறீஸ்துவை இளைஞர்களில் ... இன்றியமையாதது. (இதுவும்தலைகீழாய்க் குழம்பி உள்ளது)

4. கிறீஸ்தவ உருவாக்கலின் தொட்டில் குழம்பிக் கிடக்கிறது.

5. இன்றையஉலகில் இருக்கும் பிரச்சனை இவர்களதே. (பாவம் தலைகீழாய்த் தொங்குகிறார்கள்)

6. யாழ். மறைக்கல்வி இயக்கத்திற்கு ஊக்கமளிப்பவர் இவர்தான்.

7. ... தொட்டு சுடுகாடு வரை பெற்றோரின் வழிநடத்தல் இன்றியமையாதது.

8. இத்திருவருட்சாதனத்தினத்தன்றுதான் பிள்ளைகளின் ஞானவாழ்வின்பொறுப்புப் பெற்றோருக்குக் கொடுக்கப்படுகிறது.

* * *

**இடம்-வலம்**

1. இம்மைக்கும், மறுமைக்கும் இது பயனளிக்கும்.

9. இறைவன் அளித்த இக்கொடையைமறைக்கல்வியால் வளர்க்க வேண்டும்.

10. பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமிடையே இது இல்லாததாலேதான் பிணக்குகள் ஏற்படுகின்றன.

11. இறை ... இன்றி நாம் கரைசேர முடியாது.

12. நமது விசுவாசத்தின் அடிப்படை, கிறீஸ்துவின் இச்செயலிற்றான் தங்கியுள்ளது.

13. இத் திருநாளன்று மறைக்கல்வித் தினம் கொண்டாடப்பட வேண்டுமென ஈழத்து ஆயர்கள் பணித்துள்ளனர். (வலம்—இடம்)

* * *

விடைகள் யாவும்: யாழ். மறைக்கல்வி நடுநிலையம், ஆயர் இல்லம், யாழ்நகர் என்ற முகவரிக்கே அனுப்பப்பட வேண்டும்.

பாதுகாவலனில் வெளியாகும் கூப்பனில்வரும் விடைகளே ஏற்றுக்கொள்ளப்படும்.

போட்டி முடிவுதேதி **20-5-72.**

அனுப்பியவர்:

பெயர்: ..............................................

முகவரி: ..............................................

..............................................

# யாழ். மறைமாவட்ட மறைக்கல்வித் தினம் — வைகாசி 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயது முதிர்ந்தோர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்தவ பெயர் அவசியமா?

ஞானஸ்நானத்தின் போது கிறீஸ்தவ பெயர்கள் ஞானஸ்நானம் பெறுபவர்களுக்கு இடுவது வழக்கமே. ஆனால் முதிர்ந்தவர் திருமுழுக்குப் பெறும்பொழுது அவர்களது பழையபெயர்களை இனிமேல் வைத்திருக்கலாம் எனவும் புதிய கிறீஸ்தவபெயர் இடுவது அவசியமில்லையெனவும் வத்திக்கான் திருச்சடங்குப் பரிபாலன அதிகாரிகளிலொருவராகிய கெலியர் சுவாமியார் திருச்சபையின் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார். பெல்ஜியன் கொங்கோஎன முன்னாள் அழைக்கப்பட்ட சயிறேதேச கருதினால் மருலா அடிகளார் சுதேச பெயர்கள் இடுவதில் போதிய கவனம் செலுத்தத் தவறினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டது நேயர்கள் ஞாபகத்தில் இருக்கலாம்.

## வேதபாரகரின் விசுவாசம் அசைவற்றதாயிருக்கவேண்டும்

கத்தோலிக்க சமயவிசுவாச விளக்கங்களைத் தெளிவுபடுத்தும் வேலையைத் தலைமேற்கொண்டிருக்கும் வேதபாரகர் மக்களின் விசுவாசம் தளர்ச்சியடையக் கூடிய முறையில் தர்க்கங்களில் ஈடுபடுவதை பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் அண்மையில் வன்மையாகக் கண்டித்திருக்கிறார். வேதபாரகர்களைப்பற்றி அவர் பொதுவாகக் கூறியிருந்தாலும், குறிப்பாக ஒல்லாந்து தேச வேதபாரகர்களையே மனதில் கொண்டிருந்தார் என்பது வெளிப்படை. அத்தேசத்திலுள்ள சில வேதபாராகர்களின் வினோதபோக்குகள் பள்ளிப்பிள்ளைகள் படிக்கும் சில சமய நூல்களிலும் தோன்றிவிட்டதன் பயனாக பரிசுத்த தந்தை அத்தன்மையான போதக நூல்கள் யாவற்றையும் பிள்ளைகள் மத்தியில் வெளித்தோன்றாதிருக்க வழிவகைகள் எடுக்குமாறு கேட்டிருக்கிறார்.

# சுவிற்சர்லாந்தும் கத்தோலிக்கரும்

ஒரு புரொட்டஸ்தாந்த நாடாகிய சுவிற்சர்லாந்திலே புரொட்டஸ்தாந்த சமயமாற்றம் ஏற்பட்டபின் முதன்முறையாக இப்போது கத்தோலிக்கரின் தொகை புரொட்டஸ்தாந்தரின் தொகையைக் காட்டிலும் அதிகரித்திருக்கிறது. தற்பொழுது அந்நாட்டிலே 31லட்சம் கத்தோலிக்கரும், பலவேறு சபைகளைச் சேர்ந்த 29லட்சத்து 90ஆயிரம் கிறிஸ்தவர்களும் இருக்கின்றார்கள். கடந்த 20வருடங்களிலும் அங்கே கத்தோலிக்கரின் தொகை 58 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. கல்வின், சுவிங்லி முதலாம் பெரிய புரட்டஸ்தாந்த சமயதிருத்தக்காரரின் நாடாகிய சுவிற்சர்லாந்திலே கத்தோலிக்கரின் தொகை இவ்விதம் அதிகரிக்கக் காரணம்; இத்தாலிய, ஸ்பானிய கத்தோலிக்கர் அங்கு பெருந்தொகையாகக் குடியேறி பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுவருவதும், அந்நாட்டில் வாழும் கத்தோலிக்க பக்கள் மத்தியில் பிறப்பு விகிதம் வெகுவாக அதிகரித்து வருவதுமேயாகும்.

## ஆண்டவரது ...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

தை ஆயத்தம் செய்யச் செல்கின்றார். ஆதலால் நாம் மனதினால் மேலுலகில் வசிப்பவராக நினைந்து இத்திருநாளில் 'அல்லேலூயா' என்ற ஆனந்த கீதத்தைப் பாடி ஞான ஆனந்தம் அடைவோம்.

நமது அரிய இரட்சகர் பரலோகத்தில் தமது பிதாவின் வல்லமையோடு இருந்து நாம் புண்ணிய சீலராய் மோட்ச நகருக்கு எப்பொழுது வருவோமென்று ஆவலோடு காத்துக்கொண்டிருக்கின்றார். ஆதலால் நாமும் இவ்வுலகில் மூவித சத்துருக்களையும் போர் பொருது வென்று மோட்ச இராச்சியத்தின் சுதந்திரத்தை அடைய என்றென்றும் முயல்வோமாக.

ஆசிரியர்—எவ். எஸ். சி.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் இரக்கத்தாலும் புனித அந்தோனியார், சதாசகாயமாதா, யூதாததேயு, மடுமாதா, இவர்களின் சகாயத்தினாலும் நான்கேட்டுக்கொண்ட காரியம் நிறைவேறினதால் நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமம் எங்கும் புகழப்படுவதாக. காலதாமதத்திற்கு வருந்துகிறேன்.

ஓர் பக்தன்.

## ஆசிரிய திலகம், எழுத்துலக மேதை செல்வி மேரிரேஸ் பிளசம் சாமுவேல் (ரோஜா) நெடுந்துயிலாழ்ந்த முதலாண்டு நினைவு — 16-5-72

இறைவனுந் தாம்வாழ் இன்மலர்ப் பூங்கா
முறையினி னேக்கையின் முன்னொரு வெற்றிடங்
கண்ணெதிர் காண்டலுங் கண்கவ ரோர்மலர்
விண்ணினச் சோலையில் விளங்கிட வைத்திட
மண்ணகந் தேடினன் மாசறு சேவையைச்
சொன்னதுன் வடிவம் சோர்முகங் கண்டனன்
பொன்னகப் பூங்கா பொலிவுறு மென்றே
தன்னகம் மலர்ந்து தாங்கரு வாஞ்சையில்
தாவி யணைத்துத் 'தனிப்பெருஞ் செல்வமே
வாநீ ரோஜா! வந்திலைப் பாரு'என்
றுன்செவி யுணர உரைத்த ரகசியம்
நன்செயு மென்றே நம்பிநீ யுடனே
தூண்டிய விறைவனைத் தொடர்ந்தனை யாதலின்
ஆண்டவன் பூங்கா அழகினிற் பொலிந்தது
முதல்வ னெடுப்பவை முதற்றர மன்றோ!
இதழ்க ளசைத்திலை; இறுதியோர் வார்த்தை
இணைபிரி யாவிடை ஏதுமே சொல்லிலை
முந்திநீ சென்றதே புந்தியி லறிவோம்
எந்தவோர் பணிக்கு ஏதுமே யறியோம்
வாசனேர் மலரை வாஞ்சையிற் பறித்த
ஈசனே யறிவா னீசனே யறிவான்.

ஆன்ம சாந்திக்காக இத்தினத்தில் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயம், சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயம், மட்டக்களப்பு தாண்டவன்வெளி புனித வியாகுல நாயகி ஆலயம் ஆதியாமிடங்களில் துக்கப் பலிபூசைகள் சொல்லப்படும்.

**ஜீவியத்தில் ரோஜாவை நேசித்தவர்களே,**
**மரணத்திலும் அவரை மறவாதீர்.**

இங்ஙனம்,
சோதரர், மைத்துனர், மருமக்கள்.

ஜசிந்தா லொட்ஜ்,
பண்டத்தரிப்பு.

## பூசை வழிகாட்டி
### வைகாசி—1972.

15 திங்கள்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள் :** அப். பணி 19: 1—8
அரு. 16 : 29—33

16. செவ்வாய்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள் :** அப். பணி 20: 17—27
அரு. 17 : 1—11

17. புதன்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள் :** அப். பணி 20: 28—38
அரு. 17 : 11—19

18. வியாழன்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள் :** அப். பணி. 22: 30. 23 : 6—11
அரு. 17: 20—26

19. வெள்ளி: நாட்பூசை [வெ]
**வாசகங்கள் :** அப். பணி 25 : 13—21
அரு. 21 : 15—19

20. சனி: நாட்பூசை [வெ]
**வாசகங்கள் :** அப். பணி 28 : 16—20,30—31
அரு. 21 : 20—25

21. ஞாயிறு: பரிசுத்த ஆவி விழா [சி]
**வாசகங்கள் :** அப். பணி 2: 1—11
1கொரி. 12 : 3—7, 12—13
அரு. 20 : 19—23

✠

மறைவாஞ்சலி

## 10-வது வருட ஞாபகம்

**திருமதி. விக்ரோறியாப்பிள்ளை அருளப்பு**

**மறைவு—14-5-1962.**

**"பந்தாண்டு காலம் கழிந்ததுவே**
**தாயே நும்**
**புத்திரர் எம் துயரக் கனல்**
**நூர்ந்ததில்லை**
**முத்தியொளி தாங்கள் அடைந்**
**தின்பம் துய்க்க**
**கர்த்தனருள் நித்தமும் நாம்**
**வேண்டுகின்றோம்"**

"இரக்கமுள்ள இறைவா! உமதடியாளாகிய விக்ரோறியாவின் ஆன்மாவுக்கு நித்திய ஒளியைக் கட்டளையிட்டருளும்; சமாதானத்தில் இளைப்பாறுவாராக. ஆமென்"

இதனைக் கண்ணுறும் அன்புநிறை உறவினர், நண்பர், வண. குருப்பிரசாதிகள் சங். சந்நியாசர், கன்னியர், ஆசிரியர், மாணவர் மற்றும் அனைவரையும், இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறும், 15-5-72 திங்கட்கிழமை **இளவாலை** புனித அன்னம்மாள் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் துக்கப்பாடற் பூசையில் பங்குபற்றிச் செபிக்குமாறும், தயவாகக் கேட்டு நிற்கிறோம்.

பிரிவால் துயருறும் :

**கணவர் :** சந்தியாப்பிள்ளை அருளப்பு வைத்தியர்.

மக்கள் : திருமதி. செசிலியா, அந்தோனிப்பிள்ளை திருமதி. அல்பீனம்மா, மனுவேற்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை). திரு. ஏ.ஜே. அல்போசன்சஸ்(தலைமை ஆசிரியர் ஆர். சி. பாடசாலை, மாரீசன்கூடல்). சங். சிஸ்ரர். சென். ஜெறோம் (திருக்குடும்ப மடம், இளவாலை). செல்வி. எம். ஜே. அருளப்பு (ஆசிரியை அக்னேஸ் மடம் பெ. வித்தியாசாலை, மாத்தளை). திருமதி. மேரிதிரேஸ ராணி மனுவேற்பிள்ளை (ஆசிரியை புனித அன்னம்மாள் வித்தியாலயம், கொட்டாஞ்சேனை). திருமதி. பொலின் மரியா சுவாம்பிள்ளை. திருமதி. எம். ஆர் வி. யேசுதாசன் (ஆசிரியை, புனித மைக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு). மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உடையார் வீதி,
இளவாலை.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

புனித யூதாததேயுவின் மன்றாட்டினால் எனது மகள் பயங்கரமான நம்பிக்கையில்லாத ஒப்பிரேசனில் காப்பாற்றப்பட்டா. அதைத்தொடர்ந்து அவவை அநேக வியாதிகள் இன்னும் வேதனைப்படுத்திக்கொண்டேயிருக்கின்றன. அர்ச்சியசிஷ்ட யூதாததேயுவே, ஆண்டவரிடம் வேண்டி மகளுக்குப் பூரண சுகத்தைப் பெற்றுத் தந்தருளும்படி வேண்டுகின்றேன்.

புனிதரின் நாமம் புகழப்படுவதாக. அ. ஞானமுத்து

மயிலிட்டி வடக்கு.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் ஆண்டு வைகாசி மாதம் 13-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300. தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org